**தமிழ்நாடு அரசு**

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**

# 2005ஆம் ஆண்டின் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான ஏடு

(ஆகஸ்டு 2023)


212, இராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை–600 004.
தொலைபேசி: 044–24643935 நிகரி: 044–24643935

**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்**

212, இராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை–600004.
தொலைபேசி/நிகரி :044–24643935

**1. முன்னுரை**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தன்மை, அமைப்பு, செயல் வரம்பு மற்றும் பணிகள் குறித்து பெருவாரியான மக்களுக்கு தகவல் வழங்கும் பொருட்டு 2005ஆம் ஆண்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி இந்த ஏடு வெளியிடப்பட்டுள்ளது.

**2. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தோற்றம்**

இந்திரா சஹானி – எதிர் –இந்திய ஒன்றியம் (JT 1992 (6) SC 273) என்ற வழக்கில் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய ஆணையின்படி அரசாணை (நிலை) எண்.9, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 15.3.1993இல் அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)ஐ, கூறு 340–உடன் கருத்தில் கொண்டு, ஒரு நிரந்தர அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசரின் தலைமையில் 15.3.1993 முதல் இவ்வாணையம் செயல்பட்டு வருகிறது.

**3. ஆணையத்தின் அதிகாரங்கள், செயல்கள் மற்றும் ஆய்வு எல்லைகள்**

அரசாணை (நிலை) எண்,9, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 15.3.1993இல் கீழ் காணும் ஆய்வு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.
(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.
(3) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும் இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளையொட்டியும் அமையும்.

அரசாணை (நிலை) எண்,30, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 11.7.2006இல் கீழ்க்காணும் ஆய்வு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.

(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.

(3) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும் இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளையொட்டியும் அமையும்.

(4) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.

(5) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

அரசாணை (நிலை) எண்.35, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 21.3.2012இல் ஆணையத்தின் ஆய்வு எல்லைகளில் திருத்தம் செய்யப்பட்டு கூடுதலாக பணிகள் வழங்கப்பட்டன.

(1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.

(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.

(3) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும் இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளையொட்டியும் அமையும்.

(4) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.

(5) மிகப்பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிலிருந்து உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு சமுதாயங்கள் வைத்துள்ள முறையீடுகளை ஆராய்ந்து ஆணையம் பரிந்துரை வழங்குதல்.

(6) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

அரசாணை (நிலை) எண்.52, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 8.7.2020இல் மேற்கூறப்பட்டுள்ள ஆய்வு எல்லைகள் மீளவும் குறிப்பிடப்பட்டு ஆணையிடப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.92, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 17.11.2022இல் கீழ்க்காணும் ஆய்வு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.
(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.
(iii) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.
(iv) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வகைப்பாடு மற்றும் உள்–வகைப்பாடு செய்தல் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் மற்றும் தொடர்புடைய உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அறிக்கைகளை ஆணையம் சமர்ப்பிக்கும்.
(v) பல்வேறு சமுதாயங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் நோக்கில், அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்களில் இடம்பெற்றுள்ள சமுதாயங்களின் தற்போதைய நிலையை ஆராயத்தக்க புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காக ஆணையம் தனிப்பட்ட ஆய்வுகள் நடத்தியும், மதிப்பீடுகள் செய்தும் அதன் பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும்.
(vi) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

அரசாணை (நிலை) எண்.6, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 12.1.2023இல், கீழ்க்காணும் கூடுதல் ஆய்வு வரம்பு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

> "சி.ஏ. எண்.2600/2022 என்ற வழக்கில் 31.3.2022அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், குறிப்பாக அதன்பத்திகள் 68 மற்றும் 73இல், குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் மிகப்பிற்படுத்தப்பட்டவகுப்பினர் மற்றும் சீர்மரபினர் சமுதாயங்களுக்குள் உள்ஒதுக்கீடு வழங்கக் கோரும்முறையீடுகளை ஆய்வு செய்து, மூன்று மாதங்களுக்குள் அரசுக்கு ஆணையத்தின் அறிக்கைஅளித்தல்."

அரசாணை (நிலை) எண்.22, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 11.4.2023இல், அறிக்கை அளிப்பதற்கான மூன்று மாத கால வரம்பு, 12.4.2023 முதல் மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆணையத்தின் பணிகள் நீதிமுறை சார்புடையதாகும். ஆணையத்தால் அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகள் / கருத்துகள் ஆலோசனை ரீதியிலானவை. ஆணையத்தின் பரிந்துரைகள் / கருத்துக்களை அரசு ஏற்கலாம் அல்லது பிற வகையில் நடவடிக்கை எடுக்கலாம்.

## 4. ஆணையத்தின் அமைப்பு

அரசாணை (நிலை) எண்.92, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 17.11.2022இல், 17.11.2022அன்று முதல் 3 (மூன்று) ஆண்டுகள் பணிக்காலத்துடன் மறுசீரமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் விவரம் பின்வருமாறு:–

| | | | |
|---|---|---|---|
| (1) | நீதியரசர் திரு. வீ.பாரதிதாசன்<br>உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் | : | தலைவர் |
| (2) | முனைவர் ச.கருத்தையா பாண்டியன், இஆப (ஓய்வு) | : | உறுப்பினர் |
| (3) | முனைவர் மு. ஜெயராமன், இஆப (ஓய்வு) | : | உறுப்பினர் |
| (4) | திரு இரா. சுடலைக்கண்ணன், இஆப (ஓய்வு) | : | உறுப்பினர் |
| (5) | திரு கே. மேகராஜ், இஆப (ஓய்வு) | : | உறுப்பினர் |
| (6) | முனைவர் பெரு. மதியழகன் | : | உறுப்பினர் |
| (7) | முனைவர் எஸ்.பி. சரவணன், | : | உறுப்பினர் |
| | <u>அலுவல்சார் உறுப்பினர்கள்</u> | | |
| (8) | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் | : | உறுப்பினர் |
| (9) | பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் | : | உறுப்பினர்–செயலாளர் |

ஆணையத்தின் தலைவர் முழுநேரமாக செயல்படுவார். உறுப்பினர்கள் அலுவல்–சார்பற்றவர்களாக பகுதி–நேரமாக செயல்படுவார்கள். மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் அலுவல்–சார் உறுப்பினராகவும், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அலுவல்–சார் உறுப்பினர்–செயலாளராகவும் உள்ளனர்.

## 5. ஆணையத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள்

தலைமைச் செயலகப் பணியமைப்பிலிருந்து பணிமாறுதலில் நியமனம் செய்யப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் அவர்களின் பெயர்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள ஊதிய விகிதத்தில் ஆணையத்தின் செயலகப் பணிகள் மற்றும் இதர பணிகளை செயல்படுத்துகின்றனர்.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | ஊதிய விகிதம் |
|---|---|---|
| 1. | திரு ரா. செந்தில்குமார்<br>சார்புச் செயலாளர் | நிலை–25<br>(ரூ.59300–217600) |
| 2. | திருமதி சு. மேகலா<br>உதவிப் பிரிவு அலுவலர் | நிலை–16<br>(ரூ.56100–134200) |
| 3. | திரு பா. சுப்பிரமணியம்<br>முதன்மைத் தனிச் செயலர் | நிலை–26<br>(ரூ.61900–228100) |
| 4. | திரு சே. புவனேந்திரன்<br>அலுவலக உதவியாளர் (சி.நி.) | நிலை–1<br>(ரூ.15700–58000) |
| 5. | திரு சு. ஹரிஹரன்<br>அலுவலக உதவியாளர் (சி.நி.) | நிலை–1<br>(ரூ.15700–58000) |

2023–2024ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் இவ்வாணையத்தின் நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.129.89 இலட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

## 6. ஆணையத்திற்கு கோரிக்கை மனுக்கள் / முறையீடுகள் அனுப்புதல்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு கோரிக்கை மனுக்களையும், முறையீடுகளையும் எழுத்துப்பூர்வமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பலாம்.

"உறுப்பினர்–செயலாளர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்,
212, இராமகிருஷ்ண மடம் சாலை,
மயிலாப்பூர், சென்னை–600004."
மின்னஞ்சல்: msbcc@tn.gov.in

## 7. பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் விவரங்கள்

| அதிகாரி | பதவியின் பெயர் | முகவரி | தொலைபேசி எண். | நிகரி எண். |
|---|---|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் | சார்புச் செயலாளர் | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், 212, இராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை–600004 | 044–24643935 | 044–24643935 |
| மேல்முறையீட்டு அலுவலர் | உறுப்பினர்–செயலாளர்/ பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், 212, இராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை–600004. | 044–24643935/ 28511124 | 044–24643935 |

**அணில் மேஷ்ராம்**
**உறுப்பினர்–செயலாளர்**
(18,8,2023)

**இணைப்பு**

**தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்களின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விவரம்.**

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 13.11.1969 | முதலாம் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்<br><br>தலைவர்<br><br>1) திரு ஏ.என். சட்டநாதன்,<br>(முன்னாள் ஆட்சியர் சுங்கவரித்துறை)<br><br>உறுப்பினர்கள்<br><br>2) திரு.எஸ்.சின்னப்பன்,<br>மாவட்ட & குற்றவியல் நீதிபதி (ஓய்வு)<br><br>3) திரு எம்.ஏ.ஜமால் ஹுசேன்,<br>மாவட்ட & குற்றவியல் நீதிபதி (ஓய்வு)<br><br>உறுப்பினர் செயலாளர்<br><br>4) பிற்படுத்தப்பட்டோர நல இயக்குநர் | 18.11.1969 முதல் 26.11.1970 வரை | அரசாணை (நிலை) எண். 842, சமூக நலத் துறை, நாள் 13.11.1969 | (1) பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காகவும் அவர்கள் நிலையை மேம்படுத்தவும் மாநில அரசு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை தமிழ்நாடு பிற்பட்டோர் நலக் குழு ஆராயும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனை மேம்படுத்துதல், குறிப்பாக கல்வி, மாநில அரசு துறைகளில் வேலை வாய்ப்பு ஆகியவைகளில் இந்த நடவடிக்கைகள் எடுத்த அளவுக்கு பயனளிப்பவனாக இருக்கின்றன என்பதை குழு பரிசீலிக்கும்.<br>(2) இவ்வகுப்பினருக்கு கல்வி மற்றும் இதர துறைகளில் மாநில அரசாங்கம் அளித்து வரும் சலுகைகள், உரிமைகள், வசதிகள் குறித்தும் இவற்றின் மூலம் அவர்களிடையே காணும் மாற்றங்களையும் அத்துடன் கூட, கல்வி மற்றும் பிற துறைகளில் மிகப் பிற்பட்ட வகுப்பினர்களுடைய நிலையில் ஏதேனும் முன்னேற்றம் இருக்கிறதா?<br>(3) பிற்பட்ட வகுப்பினர், மிகப் பிற்பட்ட வகுப்பினர் இவர்களுடைய நிலையை மேம்படுத்த மாநில அரசாங்கம் கீழ்க்காணும் தலைப்புகளில் மேற்கொண்டு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது குறித்து, குழு பரிந்துரை வழங்ககலாம்,<br>1. தொழில் கல்லூரிகள், உயர்தரக் கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளில் இடம் ஒதுக்குதல் உள்ளிட்ட கல்வி வசதிகள்,<br>2. அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம்,<br>3. தொழில், வர்த்தகம், இயந்திரத் தொழில்துறை,<br>4. கிராமப் பகுதிகளுக்கான கடன் வசதி, விற்பனை வசதி, கூட்டுறவு,<br>5. வீட்டு வசதி.<br>6. மானிய உதவிகள்.<br>7. சமுதாய நல வளர்ச்சி.<br>(4) பிற்பட்ட வகுப்பினர், மிகப் பிற்பட்ட வகுப்பினர், இவர்களுடைய நிலையை மேம்படுத்த மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால நடவடிக்கைகள் குறித்தும், நீண்ட கால நடவடிக்கைகள் குறித்தும் குழு பரிந்துரை வழங்கலாம். |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத் தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 13.12.1982 | <u>இரண்டாம் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)திரு ஜே.ஏ.அம்பாசங்கர், இ.ஆ.ப.,(ஓய்வு)<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு எஸ்.ஆர்.ராதா, மே.ச.உ.<br>3)திரு ஜி.விஸ்வநாதன்,ச.ம.உ.,<br>4)திரு வி.வி.சுவாமிநாதன், ச.ம.உ..,<br>5)திரு எஸ்.ஆண்டித்தேவர், ச.ம.உ.,<br>6)திரு பி.நெடுமாறன், ச.ம.உ..,<br>7)திரு பி.அன்பில் தர்மலிங்கம், ச.ம.உ.,<br>8)திரு குமரி அனந்தன், ச.ம.உ.,<br>9)திரு எம்.ஜான் வின்சென்ட், ச.ம.உ.,<br>10)திரு லியாகத் அலிகான்<br>11)முனைவர் சமரசம், ச.ம.உ.,<br>12)திருமதி சௌந்திரா கைலாசம்<br>13)திரு எம்.கே.பாலசுப்பிரமணியம்,இ.ஆ.ப. (ஓய்வு)<br>14) திரு கே.எஸ். ஜே.காஜா ஷெரீப், ச.ம.உ.,<br>15) திரு ஜி. மூர்த்தி, ச.ம.உ.,<br>16) திரு எஸ்.கோபாலகிருஷ்ண யாதவ்<br>17) திரு குழ. செல்லய்யா<br>18) திரு டி.ராமசாமி, ச.ம.உ.,<br>19) திரு ஐ.டி.ஜவஹர் ராஜ்<br>20) திரு எஸ்.கே. பாலகிருஷ்ணன்<br><br>உறுப்பினர் செயலாளர்:–<br><br>21) பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர்<br>22) திரு எம்.கிருஷ்ணமூர்த்தி,<br>இணைச் செயலாளர், சட்டத் துறை,<br>கூடுதல் உறுப்பினர் செயலாளர் | 13.12.1982 முதல் 28.2.1985 வரை | அரசாணை (நிலை) எண். 3078, சமூக நலத் துறை, நாள் 13.12.1982.<br><br>[வ.எண்.14 முதல் 20 மற்றும் 22 ல் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்கள் 13.12.1982ற்கு பிறகு அவ்வப்போது நியமிக்கப்–பட்டனர்)] | (1) சமூக நலத் துறையின் 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளிட்ட அரசாணை எண்.72ல் ஏற்பளிக்கப்பட்டு தற்போது செயலில் உள்ள பிற்பட்ட வகுப்பினர் பட்டியலை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15(4), 16(4) பிரிவுகள் மற்றும் அவற்றுக்குத் தொடர்பான இதர விதித் துறைகளை ஒட்டியும் இது சம்பந்தமான உச்ச நீதிமன்றம் அளித்துள்ள பல்வேறு தீர்ப்புகளை கருத்திற்கொண்டும் குழு மறு ஆய்வு செய்யும்.<br>(2) குழு, மாநிலத்தில் உள்ள பிற்பட்ட வகுப்பினரின் நிலைமைகள் குறித்து விவரங்களின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டவட்டமான நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கும்.<br>(3) பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காகவும் இதுகாறும் மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை மறு ஆய்வு செய்து அந்நடவடிக்கைகள் பிற்பட்ட வகுப்பினரின் வாழ்க்கை நிலை உயர குறிப்பாக, கல்வி வளர்ச்சியிலும் மாநில அரசுப் பதவிகளில் அமர்வதிலும் அவர்களுக்கு எந்த அளவுக்கு உதவியுள்ளன என்பதை மதிப்பிடும்.<br>(4) பிற்பட்ட வகுப்பினருக்கு மாநில அரசு அளித்துள்ள சலுகைகள், முன்னுரிமைகள் மற்றும் உதவிகளால், கல்வியிலும் இதர துறைகளிலும் அவ்வகுப்பினர் கண்டுள்ள முன்னேற்றங்களை ஆய்வு செய்து மதிப்பீடு செய்யும்.<br>(5) கீழ்க்காணும் துறைகளில் பிற்பட்ட வகுப்பினரின் நிலைமையை உயர்த்த மாநில அரசு மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அரசுக்கு பரிந்துரைக்கலாம்,–<br>1. கல்வி– தொழில் கல்வி நிறுவனங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு உட்பட<br>2. அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம்<br>3. வணிகம், வர்த்தகம் மற்றும் தொழில்<br>4. கிராமப்புறக் கடன், விற்பனை வசதி, கூட்டுறவு.<br>5. வீட்டு வரதி<br>6. மானியங்கள், மற்றும்<br>7. சமுதாய வளர்ச்சி.<br>(6) பிற்பட்ட வகுப்பினரின் வாழ்க்கை நிலைகளை உயர்த்த மாநில அரசு எடுக்க வேண்டிய குறுகிய கால மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் பற்றி குழு பரிந்துரைகள் செய்யலாம்.<br>(7) குழு, தான் திரட்டிய ஆதாரங்களின் அடிப்படையில், ஆராய்ந்து, சமூக நலத் துறையின் 1980ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1ஆம் நாளிட்ட அரசாணை எண்.73ல் உத்தரவிடப்பட்ட இடஒதுக்கீடு முறை தொடர்ந்து செயலில் இருக்கலாமா? அல்லது மாற்றம் ஏதேனும் தேவையா என்பது குறித்து பரிந்துரை செய்யும்.<br>(8) கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து எழும் எல்லா வினாக்களையும் பிரச்சினைகளையும் குழு முழுமையாக ஆராயும்,–<br>1. மாநிலத்தில் பிற்பட்ட வகுப்பினர் மக்கட்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும்.<br>2. கல்லூரிகள், உயர்கல்வி நிறுவனங்கள் உட்பட கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு.<br>3. மாநில அரசுப் பணிகளில் பிற்பட்ட வகுப்பினருக்கான நியமன ஒதுக்கீடு. |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 15.3.1993 | <u>நிலையாக அமைக்கப்பட்ட முதலாவது ஆணையத்தின்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு கே.சண்முகம்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு யூ.எஸ். நடராஜன், இ.ஆ.ப., (ஓய்வு)<br>3)திரு எம்.மாணிக்கவேலு, இ.ஆ.ப., (ஓய்வு)<br>4)முனைவர் சி.முருகதாஸ்,<br>பொருளாதாரப் பேராசிரியர்<br>5)திரு சி.முத்துசாமி, இ.ஆ.ப., (ஓய்வு)<br>6)முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசியர்<br><br>அலுவல்–சார் உறுப்பினர்கள்:–<br><br>7)பி.ப. (ம) சி. நல இயக்குநர்<br>8)மி.பி.ப. (ம) சீ.ம. நல இயக்குநர்<br><br>உறுப்பினர் செயலாளர்:–<br><br>திரு. ஆர்.செல்லமுத்து, இஆப., | இரண்டு ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண்.9, பிப & மிபிப நலத் துறை, நாள் 15.3.1993 | (1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.<br>(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.<br>(3) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும் இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளையொட்டியும் அமையும். |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 29.3.1995 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு கே.சண்முகம்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு ஆர்.செல்லமுத்து, இஆப.,<br>3)திரு யூ.எஸ்.நடராஜன், இஆப., (ஓய்வு)<br>4)திரு எம்.மாணிக்கவேலு, இஆப.,(ஓய்வு)<br>5)முனைவர் சி.முருகதாஸ்<br>பொருளாதாரப் பேராசிரியர்<br>6)திரு சி.முத்துசாமி, இஆப.,(ஓய்வு)<br>7)முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br>அலுவல்–சார் உறுப்பினர்:–<br><br>8)பிந, & சி நல இயக்குநர்<br><br>அலுவல்–சார் உறுப்பினர் செயலாளர்:–<br><br>9)மிபிப & சீம நல இயக்குநர் | இரண்டு ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 17, பி.ப. (ம) மிபிப நலத் துறை, நாள் 29.3.1995 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 17.3.1997 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு கே,எம். நடராஜன்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு சுப. தங்கவேலன், ச.ம.உ.<br>3)திரு பேரூர் நடராஜன், ச.ம.உ.<br>4)திரு திருவிடைமருதூர் இராமலிங்கம், ச.ம.உ.<br>5)திரு. சி.முத்துசாமி, இஆப., (ஓய்வு)<br>6) முனைவர் சி.முருகதாஸ்<br>பொருளாதாரப் பேராசிரியர்<br>7) முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி,ந, & சி நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)இயக்குநர், மிபிப (ம) சீம நலம் | இரண்டு ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 24, , பி.ப. (ம) மிபிப நலத் துறை, நாள் 17.3.1997 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 31.3.1999 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு கே,எம். நடராஜன்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு சுப. தங்கவேலன், ச.ம.உ.<br>3)திரு பேரூர் நடராஜன், ச.ம.உ.<br>4)திரு திருவிடைமருதூர் இராமலிங்கம், ச.ம.உ.<br>5)திரு. சி.முத்துசாமி, இஆப., (ஓய்வு)<br>6) முனைவர் சி.முருகதாஸ்<br>பொருளாதாரப் பேராசிரியர்<br>7) முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி.ந, & சி நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)இயக்குநர், மிபிப (ம) சீம நலம் | ஓராண்டு | அரசாணை (நிலை) எண். 19, , பி.ப. (ம) மிபிப நலத் துறை, நாள் 31.3.1999 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 16.3.2000 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு கே,எம். நடராஜன்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு சுப. தங்கவேலன், ச.ம.உ.<br>3)திரு பேரூர் நடராஜன், ச.ம.உ.<br>4)திரு திருவிடைமருதூர் இராமலிங்கம், ச.ம.உ.<br>5)திரு. சி.முத்துசாமி, இஆப., (ஓய்வு)<br>6) முனைவர் சி.முருகதாஸ்<br>பொருளாதாரப் பேராசிரியர்<br>7) முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி.ந, & சி நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)இயக்குநர், மிபிப (ம) சீம நலம் | இரண்டு ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண்.. 21, , பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 16.3.2000 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 7.3.2001 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு கே,எம். நடராஜன்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு சுப. தங்கவேலன், ச.ம.உ.<br>3)திரு பேரூர் நடராஜன், ச.ம.உ.<br>4)திரு திருவிடைமருதூர் இராமலிங்கம், ச.ம.உ.<br>5)திரு. சி.முத்துசாமி, இஆப., (ஓய்வு)<br>6) முனைவர் சி.முருகதாஸ்<br>பொருளாதாரப் பேராசிரியர்<br>7) முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி.ந, & சி நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)இயக்குநர், மிபிப (ம) சீம நலம் | ஓராண்டு | அரசாணை (நிலை) எண். 16, , பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 7.3.2001 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 13.11.2002 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1) நீதியரசர் திரு என்.ஆறுமுகம் உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>2) பி.ந, & சி நல இயக்குநர் | மூன்று ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 51, , பி.ப, பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள், மிபிப (ம) சி நலத் துறை, நாள் 13.11.2002 | |
| 1.3.2006 | அரசாணை (நிலை) எண்.17, பிப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 1.3.2006ல் மறுசீரமைக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவியேற்கவில்லை. இந்த அரசாணை செயல்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. | | | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 14.7.2006 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம், உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்s:–<br><br>2)திரு இல.புகழேந்தி, முன்னாள் ச.ம.உ.<br>3)திரு திருவிடைமருதூர் ஏ. இராமலிங்கம்<br>4)திரு வி.வேலுச்சாமி, முன்னாள் ச.ம.உ.<br>5)திரு இரா. பெர்னார்ட், முன்னாள் ச.ம.உ.<br>6)திருமதி பூங்கோதை செல்லதுரை<br>7) முனைவர் டி.சுந்தரம் சமூகவியல் பேராசிரியர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி.ந, & சி நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)இயக்குநர், மிபிப (ம) சீம நலம் | இரண்டு ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 30, , பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 11.7.2006 | (1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.<br>(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.<br>(3) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும் இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளையொட்டியும் அமையும்.<br>(4) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.<br>(5) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல். |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 11.7.2008 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்s:–<br><br>2)திரு எம்.ஏ.வைத்தியலிங்கம், முன்னாள் ச.ம.உ.<br>3)திரு இரா. மோகன், முன்னாள் பா.ம.உ.<br>4)திரு கோட்டூர் ராஜசேகரன்<br>5)திருமதி காஞ்சனா கமலநாதன்,முன்னாள் ச.ம.உ.<br>6)திரு எஸ்.டேவிட் செல்வன், முன்னாள் ச.ம.உ<br>7) முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி.ந, & சி நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்உறுப்பினர்:–<br><br>9)இயக்குநர், மிபிப & சீம நலம் | இரண்டு ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 76, , பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 11.7.2008 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 14.7.2010 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு. எம்.ஏ.வைத்தியலிங்கம், முன்னாள் ச.ம.உ.<br>3)திரு. இரா. மோகன், முன்னாள் பா.ம.உ.<br>4)திரு கோட்டூர் இராஜசேகரன்<br>5)திருமதி காஞ்சனா கமலநாதன், முன்னாள் ச.ம.உ.<br>6)திரு எஸ்.டேவிட் செல்வின், முன்னாள் ச.ம.உ.<br>7) முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி.ப. நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)இயக்குநர், மிபிப (ம) சீம நலம் | இரண்டு ஆண்டுகள்<br><br><u>குறிப்பு</u><br>16,5,2011 (பி.ப) அன்று தலைவர் பதவி விலகல் அறிவிப்பினை தெரிவித்தார். தலைவரின் பதவி விலகல் அறிவிப்பு ஏற்கப்படவில்லை. முன்னர் வழங்கப்பட்ட காலஅளவில் தொடர்ந்து செயல்புரிய அனுமதிக்கப்பட்டார். (அரசாணை (நிலை) எண்.37, பிப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 16,6,2011). நான்கு உறுப்பினர்கள் பதவி விலகினர். | அரசாணை (நிலை) எண். 59, , பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 14.7.2010 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 5.7.2011 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு வி.ஏழுமலை, முன்னாள் ச.ம.உ.<br>3)முனைவர் வி.எம்.முத்துக்குமார்<br>4)முனைவர் ஆர்.தாண்டவன்<br>5) முனைவர் டி.சுந்தரம்<br>சமூகவியல் பேராசிரியர்<br>6)முனைவர் எஸ். பி. தியாகராஜன்<br>7)திரு கரு. முருகானந்தம், முன்னாள் ச.ம.உ.<br><br>அலுவல்–சார் உறுப்பினர்:–<br><br>8) பி.ப. நல இயக்குநர்<br><br>அலுவல்–சார் உறுப்பினர் செயலாளர்:–<br><br>9)ஆணையர், மிபிப (ம) சீம நலம் | ஓராண்டு | அரசாணை (நிலை) எண். 43, பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 5.7.2011 | (1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.<br>(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.<br>(3) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும் இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளையொட்டியும் அமையும்.<br>(4) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.<br>(5) மிகப்பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிலிருந்து உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு சமுதாயங்கள் வைத்துள்ள முறையீடுகளை ஆராய்ந்து ஆணையம் பரிந்துரை வழங்குதல்.<br>(6) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.<br>(அரசாணை (நிலை) எண்.35, பிப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 21.3.2012ல் மேலே வ.எண்.(5)ல் உள்ள ஆய்வு எல்லை கூடுதலாக வழங்கப்பட்டது.) |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 28.12.2012 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம் உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)முனைவர் ஆர். தாண்டவன்<br>3)முனைவர் சி.முருகதாஸ்<br>4)முனைவர் வி.ஆர். திருநாராயணன்<br>5)முனைவர் எம்.ஆர்.சீனிவாசன்<br>6)முனைவர் வி.எம்.முத்துக்குமார்<br>7)முனைவர் கே. ஜெயராமன்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி,ப. நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)ஆணையர், மிபிப & சீம நலம் | மூன்று ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண்.147, பி.ப, மிபிப (ம) சி நலத் துறை, நாள் 28.12.2012 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 28.12.2015 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்தனம்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)முனைவர் கே.ராமசாமி<br>3)முனைவர் சி.முருகதாஸ்<br>4)முனைவர் வி.ஆர். திருநாராயணன்<br>5)முனைவர் எம்.ஆர். சீனிவாசன்<br>6)முனைவர் வி.எம். முத்துக்குமார்<br>7)முனைவர் கே. ஜெயராமன்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) பி,ப. நல இயக்குநர்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)ஆணையர், மிபிப & சீ.ம நலம் | மூன்று ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 71, பிப, மிபிப (ம) சிந துறை, நாள் 28.12.2015 | |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 08.7.2020 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1)நீதியரசர் எம்.தணிகாசலம்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2)திரு டி.பிச்சாண்டி, இ.ஆ.ப.,(ஓய்வு)<br>3)திரு டி.என்.ராமநாதன், இ.ஆ.ப.,(ஓய்வு)<br>4)திரு வி.சந்திரசேகரன், இ.ஆ.ப., (ஓய்வு)<br>5)முனைவர் ஏ.அழகுமலை<br>6)முனைவர் எம்.சிவக்குமார்<br>7)திரு எம்.அழகிரிசாமி<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8)ஆணையர், மி.பி.ப (ம) சீ.ம. நலம்.<br><br>அலுவல்–சார்உறுப்பினர்செயலாளர்:–<br><br>9)இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலம் | மூன்று ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 52, பிப, மிபிப (ம) சிந துறை, நாள் 8.7.2020; மற்றும் அரசாணை (வா) எண்.10, பிப, மிபிப (ம) சிந துறை, நாள் 5.2.2021. | (1) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வு செய்தல் மற்றும் அதன்மீது பரிந்துரைகளை வழங்குதல்.<br>(2) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.<br>(3) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும் இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள பல்வேறு தீர்ப்புகளையொட்டியும் அமையும்.<br>(4) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.<br>(5) மிகப்பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டிலிருந்து உள்ஒதுக்கீடு கோரி பல்வேறு சமுதாயங்கள் வைத்துள்ள முறையீடுகளை ஆராய்ந்து ஆணையம் பரிந்துரை வழங்குதல்.<br>(6) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல். |

| அமைக்கப்பட்ட நாள் | தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர் | ஆணையத்தின் காலம் | அரசாணை எண். & நாள். | ஆய்வு எல்லைகள் |
|---|---|---|---|---|
| 17.11.2022 | <u>மறுசீரமைக்கப்பட்ட ஆணையம்</u><br><br>தலைவர்:–<br><br>1) நீதியரசர் திரு. வீ.பாரதிதாசன்<br>உயர்நீதிமன்ற மேனாள் நீதியரசர்<br><br>உறுப்பினர்கள்:–<br><br>2) முனைவர் ச.கருத்தையா பாண்டியன்,<br>இஆப (ஓய்வு)<br>3) முனைவர் மு. ஜெயராமன்,<br>இஆப (ஓய்வு)<br>4) திரு இரா. சுடலைக்கண்ணன்,<br>இஆப (ஓய்வு)<br>5) திரு கே. மேகராஜ், இஆப (ஓய்வு)<br>6) முனைவர் பெரு. மதியழகன்<br>7) முனைவர் எஸ்.பி. சரவணன்<br><br>அலுவல்–சார்உறுப்பினர்:–<br><br>8) ஆணையர், மி.பி.ப (ம) சீ.ம. நலம்.<br><br>அலுவல்–சார்உறுப்பினர் செயலாளர்:–<br><br>9) ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலம் | மூன்று ஆண்டுகள் | அரசாணை (நிலை) எண். 92, பிப, மிபிப (ம) சிந துறை, நாள் 17.11.2022<br>. | (i) பிற்படுத்தப்பட்டோர் / மிகவும்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்த்திருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்த முறையீடுகள் ஆகியவற்றைப் பெறுதல், ஆய்வுசெய்தல் மற்றும் அதன் மீது பரிந்துரைகளை வழங்குதல்.<br>(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகவும்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்.<br>(iii) கிருஸ்துவர், இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மையினர் ஆகியோரில் அவர்களின் சமூக மற்றும் கல்வி ரீதியிலான பிற்படுத்தப்பட்ட நிலையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட இடஒதுக்கீடு வழங்குதல் குறித்து ஆணையம் பரிந்துரை செய்தல்.<br>(iv) பிற்படுத்தப்பட்டோர், மிகவும்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் வகைப்பாடு மற்றும் உள்-வகைப்பாடு செய்தல் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் மற்றும் தொடர்புடைய உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் அறிக்கைகளை ஆணையம் சமர்ப்பிக்கும்.<br>(v) பல்வேறு சமுதாயங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்யும் நோக்கில், அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பட்டியல்களில் இடம்பெற்றுள்ள சமுதாயங்களின் தற்போதைய நிலையை ஆராயத்தக்க புள்ளிவிவரங்களை சேகரிப்பதற்காக ஆணையம் தனிப்பட்ட ஆய்வுகள் நடத்தியும், மதிப்பீடுகள் செய்தும் அதன் பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும்.<br>(vi) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருண்மைகள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல். |